**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**-----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No. 251/2020** **Date :31/10/2022**

**PW4** (முனியமுத்து) குறுக்கு விசாரணை : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

எனது சொந்த ஊர் வி களத்தூர் அருகில் உள்ள மரவநத்தம். நான் கடந்த 9 ஆண்டுகளாக ஊர் காவல் படையில் பணியாற்றி வருகிறேன். எனது பணிக்கு நான் எனது சொந்த ஊரிலிருந்துதான் வருவேன். ஊர் காவல் படை அலுவலகத்தில் உள்ள SI மற்றும் ரைட்டர் ஆகியோர் எங்களுக்கான பணியை ஒதுக்குவார்கள். 05/02/2014 அன்று எனக்கு பழைய பேருந்து நிலையத்திற்கு பணி ஒதுக்கப்பட்டது. ஊர் காவல் படையிலிருந்து நானும் ராணியும் அன்றைய தினம் பணியாற்றினோம். அன்றைய தினம் ஜெயபால் தலைமை காவலரும் எங்களுடன் பணியாற்றினார். பழைய பேருந்து நிலையத்தில் எப்போதும் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். மௌலானா பள்ளி வீதியில் ஆட்டோக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான். முன்னால் நிற்கும் ஒரு ஆட்டோ வெளியே சென்றால் பின் வரிசையில் இருக்கும் ஆட்டோ முன்னால் கொண்டுவரப்படும் என்றால் சரிதான். ஆட்டோ நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகில் பழக்கடைகள் தள்ளுவண்டியில் வைத்திருப்பார்கள்

என்றால் சரிதான். சுமார் 10 வண்டிகள் இருக்குமா என்றால் இருக்கும். அன்றைய தினம் பழைய பேருந்து நிலையத்தில் நான் காந்தி சிலை அருகே நின்றேன். ஜெயபால் என் அருகில்தான் நின்று கொண்டிருந்தார். காந்தி சிலைக்கு வடக்கு புறம் நான் நின்று கொண்டிருந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. ஆனால், காவல் ஆய்வாளர் சுப்புலட்சுமி என்பரும் உதவி ஆய்வாளர் சரவணகுமார் என்பவரும் சம்பவ இடத்திற்கு மாலை 3.30 மணியளவில் வந்தனர். காவல் ஆய்வாளருடன்தான் சரவணகுமாரும் வந்தார் என்றால் சரிதான். அவர்களுக்கு தகவல் யார் கொடுத்தார்கள் என்றால் ஜெயபால் கொடுத்தார். காவல் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர் என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தை பற்றி யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் யாரும் கொடுக்கவில்லை நான்தான் சம்பவ இடத்தில் இருந்தேன். எதிரி பேசி வந்ததாக கூறப்படும் செல்போனை யாரும் கைப்பற்றவில்லை. இரும்பு ராடு எதையும் அங்கிருந்து காவலர் யாரும் எடுக்கவில்லை. எதிரி ஜெயபாலுக்க எதிராக காண்பித்ததாக கூறப்படும் இரும்பு கம்பியை நான் பார்க்கவில்லை. நான் தள்ளி நின்று கொண்டிருந்தேன். என்னை தவிர வேறு நபர்களும் கும்பலாக இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்தே என்னை விசாரித்தனர். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. எதிரி அப்போது மது போதையில் இருந்தார் என்ற விபரத்தை காவல் துறையினர் விசாரணைன்போது நான் கூறினேனா என்றால் அவர்கள் கேட்கவுமில்லை நான் கூறவுமில்லை. எனது

அன்றாட பணி காவல் துறையுடன் இணைந்த பணி என்றால் சரிதான். அதனால் காவல் துறையினருடன் நெருக்கமான தொடர்பு உண்டு என்றால் சரிதான். அதனால் தான் சாட்சியம் அளிப்பதற்கு நான் தகுந்த ஆள் என ஜெயபால் விசாரணை அதிகாரியிடம் கூறினார் என்றால் சரியல்ல. ஏனென்றால் நான் அங்கிருந்ததால் கூறினார். என்னைத்தவிர சுமார் 50 பேர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் சம்பவம் நடந்தது தெரிந்திருக்க வாய்ப்பிருக்கும் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்தபடி அந்த இடத்தில் வேகமாக ஆட்டோவை ஓட்டிவர முடியாது என்றால் சரிதான். நான் எவ்வளவு தொலைவிலிருந்து எதிரியை பார்த்தேன் என்றால் நான் நிற்கும் தொலைவிலிருந்து ஆஜர் எதிரி கூண்டில் நிற்கும் தொலைவு வரை இருக்கும். சம்பவ இடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வாகனங்களுடன் ஆட்களும் சென்று வந்து கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். அதனால் நான் நின்ற இடத்திலிருந்து சம்பவ இடத்தில் என்ன நடந்தது என தெளிவாக பார்க்க இயலாது என்றால் சரிதான். காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சாட்சியம் அளித்தபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate No.I,

Perambalur.